நண்பகல் 12-00

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. பி.ஜி. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வலிமையான பாரதம், வளமிக்க தமிழகம் என்ற உன்னத இலட்சியத்தின் அடிப்படையில், 2,42,160 கோடி ரூபாய், சர்வதேச முதலீடுகளைப் பெற்றது உள்ளிட்ட அளப்பரிய சாதனைகளைப் புரிந்து, நாடு போற்றும் நல்லாட்சி நடத்தி வரும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். 2014-2015 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 235 முதல் 238 வரையிலான 4 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

7. மானியக் கோரிக்கைகள், 2015–2016, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 7–மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

(இ) கோரிக்கை எண் 8–பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

(அ) கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2015-2016 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும்.*